**CC.No.23/2025 (JM.No.II, DHARMAPURI)**

**20.05.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW–7 : திரு.செந்தில்குமார், சிறப்பு காவல் ஆய்வாளர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிறப்பு காவல் ஆய்வாளராக கோபிநாதம்பட்டி காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.11.2023ம் வருடம் காலை 13.00 மணிக்கு அதியமான்கோட்டை சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது தருமபுரி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று விசாரித்தபோது உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கவியரசு மயக்க நிலையில் இருந்ததால் அவருடன் இருந்த அண்ணன் உறவான வெங்கடேசன் என்பவரை 14.00 மணிக்கு விசாரித்து, புகார் வாக்குமூலம் பதிவு செய்து, 15.00 மணிக்கு நிலையம் வந்து TN–29 BP–1686 என்ற மாருதி டிசையர் கார் ஓட்டுநர் மீது குற்ற வழக்கு எண்.333/2023 இ.த.ச பிரிவு 279, 337இன் கீழ் முதல் தகவல் அறிக்கை செய்தேன். முதல் தகவல் அறிக்கை சம்பந்தபட்ட ஆவணங்களை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2, தருமபுரி அவர்களுக்கு அனுப்பியும், சம்பந்தபட்ட பிற ஆவணங்களை எங்களுடைய உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 25.11.2023 தேதி 16.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான கோவிந்தராஜ், மாதையன் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார். பின்பு வழக்கின் சாட்சிகளான வெங்கடேசன், தேவேந்திரன், கிருஷ்ணன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சிகிச்சையில் இருந்த கவியரசு என்பவர் சிகிச்சை பலன் இன்றி இறந்துவிட்டதாக கிடைத்த தகவலின்பேரில் 26.11.2023 அன்று இவ்வழக்கின் இ.த.ச பிரிவு 279, 337இன் கீழ் இருந்து இ.த.ச பிரிவு 279, 304(எ) ஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்பு வழக்கை மேல் விசாரணைக்காக அதியமான்கோட்டை காவல் உதவி ஆய்வாளர் திரு.அதியமான் அவர்களின் மேற்பார்வைக்காக வழக்கு கோப்புகளை சமர்பித்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ3,** மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4**, இவ்வழக்கின் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

சம்பவத்தன்று இந்த வழக்கின் சம்பவ இடத்தை நேரில் பார்த்தவர் அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். வரைபடத்தின்படி பாலத்தை ஒட்டி மேற்குபுறமாக ஜே.கே மகால் உள்ளது என்றால் சரிதான். ஜே.கே மகால் என்பது பாலத்தில் இருந்து ½ கி.மீ தள்ளி உள்ளது என்றால் சரியல்ல. அ.சா.2 தேவேந்திரன் விபத்தில் இறந்துபோன கவியரசு உடன் பணிபுரிந்ததாக போலிசார் விசாரணையில் கூறியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.2 தேவேந்திரன் விபத்தை நேரில் பார்த்து இருந்தால் அவரை புகாரைகொடுத்து இருப்பார் என்றாலும், அதனால் அ.சா.2 விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. புகார், முதல் தகவல் அறிக்கை, வரைபடம் ஆகியவை நீதிமன்றத்தில் இரண்டு நாட்கள் காலதாமதமாக அனுப்பி

வைக்கப்ட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.2 தேவேந்திரன் வாக்குமூலம் மற்றும் வழக்கு ஆவணங்கள் வழக்கிற்கு ஏற்றாற்போல் ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.05.20 17:11:24 +0530